**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா.9** **Date : 23.01.2026.**

| | |
|---|---|
| **Name : மைனர் சாருலதா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. மூடிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) போலீசார் எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எந்த ஆயுதத்தால் அடித்ததாக சொன்னேன் என்றால் கட்டையால் அடித்தார்கள். போலீசார் கட்டையை என்னிடம் அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை. 3ம் எதிரி அரிவாளை காட்டியதாக சொல்லும் ஆயுதத்தை போலீசார் சான்று பொருளாக என்னிடம் அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை. சம்பவத்தன்று ஞாயிறுக்கிழமை என்பதால் எனக்கு பள்ளி விடுமுறை.

2) சம்பவத்தன்று அ.சா.1 என் தந்தை மதியழகன் வெளியே எங்கும் செல்லவில்லை. வீட்டில் தான் இருந்தார். திருமணம் செய்து கொள்ளுமாறு என் அம்மாவிடமும், என்னிடமும் வற்புறுத்தினார்கள், எந்த மாதத்திலிருந்து வற்புறுத்தினார்கள் என்றால் பிப்ரவரி மாதம் 2024 முதல் மிரட்டினார்கள். இந்த விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) அ.சா. 2 மாதேஷ்வரி 24.01.2025 ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறாகும். எனது தாயார் குணவதிக்கு ஏற்பட்ட

இறப்பிற்கு நடவடிக்கை எடுக்க கோரி உயர் அதிகாரிகளுக்கு நான் என் விருப்பத்தின் பேரில் தான் புகார் கொடுத்தேன்.

4) என் அம்மா தாரமங்கலத்தில் உள்ள மருத்துவமனையில் இறந்த போது நான் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என் தாயார் இறந்த சமயத்தில் என் தந்தை புகார்கொடுக்கவில்லை. என்ன காரணத்திற்காக என் தாயார் இறந்தார் என தெரியாததால் புகார் கொடுக்கவில்லை. என் அம்மா குணவதிக்கு பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை. என் அம்மாவை தனியார் துளசி மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். புகாரில் முகாந்திரம் இல்லாததால் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை.

5) போலீசார் விசாரணையில் மஞ்சள் நீராட்டு விழாவில் பங்கேற்ற போது எதிரி தங்கவேல் தனியறையில் இருந்த போது அறையில் வைத்து என்னை திருமணம் செய்து கொள்ள தொந்தரவு செய்ததாக நான் சொல்லவில்லை என்றால் சொன்னேன். என்னையும் எதிரிகள் மகள் போல் தான் பாவித்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை. நண்பர், உறவினர் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். 1ம் எதிரியின் மகள் எனக்கு நண்பர் என்றால் ஆமாம்.

6) அடிக்கடி அவர் வீட்டிற்கு நான் செல்வேன் என்றும் அவர்களும் என் வீட்டிற்கு வருவார் என்றால் அவ்வாறு இல்லை. அடிக்கடி எதிரிகள் வீட்டிற்கு செல்லமாட்டோம். போகும் வழியில் தான் பேசுவோம். யாரும் யார் வீட்டிற்கும் செல்லமாட்டோம். திருமணம் செய்ய சொல்லி வற்புறுத்தி மனவேற்றுமை ஏற்பட்டு ஓர் ஆண்டுகளுக்குள் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் தங்கவேல் மிரட்டியதால் கொடுக்கவில்லை.

7) போலீசார் விசாரணையில் நான் காயமடைந்து மருத்துவமனை சென்ற போது என்னை தங்கவேல் மிரட்டிய விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். உடம்பில் கட்டையால் தாக்கியது எங்கு பட்டது என்றால் தலையில் பட்டது. மருத்துவரிடம் ஊமைக்காயத்தை மிகைப்படுத்தி சொன்னதால் எனக்கு காயம் இல்லை என மருத்துவர் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு காயம் ஏற்பட்டது.

போலீசார் விசாரணையில் கட்டையால் தாக்கியதாக நான் சொல்லவில்லை என்றால் நான் சொன்னேன்.

8) தகராறு அனைத்தும் வீட்டிற்குள் நடந்தது என்றால் வெளியேயும் நடந்தது. உள்ளே எவ்வளவு நேரம் நடந்தது என்றால் உள்ளிருந்து இழுத்து வந்து வெளியே அடித்தார்கள். நான் போலீசாரிடம் வீட்டிற்குள்தான் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் வெளியேயும் நடந்ததாக சொல்லியுள்ளேன். நான் தான் எதிரிகளை அடித்துவிட்டதாக சாட்சி சதாசிவம் பார்த்து நீதிமன்றத்தில் சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை.

9) நானும் எதிரியின் மகளும் உயிருக்குயிரான நண்பர்கள் என்றும் என் தந்தை சொல்லிக்கொடுத்து எப்போதாவது தான் 1ம் எதிரியின் மகளுடன் பேசுவேன் என்று சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நானும் 1ம் எதிரி மகளும் மருதாணி போடுவது, அலங்காரம் செய்வது போன்றவை செய்யும் அளவிற்கு உயிருக்குயிரான நண்பர்கள் என்றால் அவ்வாறு இல்லை.

10) என் அம்மா இறந்த பிறகு என் அப்பா எதிரிகளிடம் சென்று என்னுடன் பேச வரச்சொன்னார் என்றால் அவ்வாறு இல்லை. போலீசார் விசாரணையில் நான், என் பெற்றோர் மாதேஷ்வரி ஆகியோர் எங்கள் வீட்டில் தான் காலையில் இருந்து இருந்தோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகளால் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

11) என் அப்பாவிற்கு தவறான பழக்கமும், முதல் மனைவியை விட மனமில்லாததால் என் அப்பாவிற்கும் என் அம்மா குணவதிக்கும் மன வருத்தம் இருந்தது என்றால் அவ்வாறு இல்லை. நான் இல்லாத போது குணவதி என் அம்மாவிற்கும், என் அப்பாவிற்கும் சண்டை இருந்தது என்றால் இல்லை. மனவேற்றுமை காரணமாக என் அம்மா மருந்து குடித்து இறந்துவிட்டார் என்றால் அவ்வாறு இல்லை. மாதேஷ்வரி தான் என் அம்மா என்று தற்போது வரை என் தந்தை மிரட்டி வருகிறார் என்றால் இல்லை.

12) சம்பவத்திற்கு ஒரு நாள் முன்பு மாவட்ட குழந்தைகள் நல வாரியம் வந்து விசாரித்தார்கள். அன்றையதினம் எனக்கு விடுமுறை என்றால் ஆமாம். யார்

யாரை விசாரித்தார்கள் என்றால் என்னையும் என் தகப்பனாரையும் மாலை 4 மணியளவில் விசாரித்தார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு எங்களை என்ன விவரம் குறித்து விசாரித்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம்.

13) குழந்தைகள் நல வாரியத்திடம் எதிரிகளை குறை சொல்லி நான் வாக்குமூலம் கொடுத்த விவரம் எதிரிகளுக்கு எவ்வாறு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திடீரென வந்து அடித்தார்களா என்றால் எதற்கு புகார் கொடுத்தீர்கள் என்று சொல்லி அடித்தார்கள். புகார் கொடுத்ததை பற்றி தெரியாத நிலையில் எதிரிகள் எங்களை அடிக்க வேண்டிய அவசியமில்லை என்றால் புகார் ஏன் கொடுத்தாய் என்று சொல்லி அடித்தார்கள்.

14) நான் என் தந்தை சொல்லி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் 2ம் எதிரியிடம் என் அப்பா தாறுமாறாக பேசிய விஷயம் குறித்து 1ம் எதிரி எங்கள் வீட்டிற்கு பேச வந்த போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. அப்போது சதாசிவம் உடனிருந்தார் என்றும் அவர் ஏன் இவ்வாறு சங்கடத்தில் செல்கிறீர் என்ற சமயத்தில் என் அப்பா தவறாக பேசி பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை.

15) என்னையும், என் அப்பாவையும் எதிரிகள் எந்த ஆயுதத்தாலும் தாக்கவில்லை என்றும் வழக்கிற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கெட்ட வார்த்தையால் திட்ட வேண்டிய அவசியமில்லை என்றும் என்னை 1ம் எதிரி மகள் மாதிரி தான் நினைத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா தாக்கிவிட்டு தப்பித்து ஓட முயன்ற போது ஏற்பட்ட உள்காயத்தை வைத்து காயம் ஏற்பட்டதாக மருத்துவமனையில் சேர்ந்தோம் என்றால் அவ்வாறு இல்லை. தங்கவேல் தான் மூன்று நாட்கள் மயக்கநிலையில் மருத்துவமனையில் இருந்தார் என்றால் இல்லை.

16) ரித்திக், அலமேலு ஆகியோரையும் இவ்வழக்கில் தவறுதலாக சேர்த்துள்ளோம் என்றால் அவ்வாறு இல்லை. அவர்களும் பிரச்சனை செய்தார்கள்.

சம்பவயிடத்தில் ரித்திக், அலமேலு இல்லாத நிலையில் அவர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள் என்றால் அவர்களும் இருந்தார்கள். முனுசாமி ஆம்புலன்சில் ஏற விடாமல் தடுத்தார் என்று சொல்வதும், அரிவாளை எடுத்து கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லியதாக சொல்வது நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கும், எதிரிக்கும் புரோக்கர் வேலை செய்யும் போது இருந்த பணபிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும் காயமடையாத என்னையும், மாதேஷ்வரியையும் வைத்து பொய்யாக வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

## DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.II, Mettur
**Case No :CC.No. 130/2025**

**Prosecution witness : அ.சா.11** **Date : 23.01.2026.**

| | |
|---|---|
| **Name : சீனிவாசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.02.2025 ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் தலைமைக்காவலர் ஆறுமுகம் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு தலைமை காவலர் சேகர் என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த மதியழகன் த/பெ.சின்னண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.46/2025 u/Sec. 126(2), 296(b), 115 (2), 118(1), 351 (3) BNS** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 6** ஆகும்.

3. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 04.02.2025 ம் தேதி காலை 8 மணிக்கு சம்பவ இடம் பனங்காடு ரோஸ்கார்டன் மதியழகன் வீட்டருகே சென்று சாட்சிகள் ஆண்டியப்பன் என்கிற ராஜா மற்றும் பிரசாந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 7** மற்றும் **அ.சா.ஆ 8** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் மதியழகன், சாருலதா, மாதேஷ்வரி, காசி (எ) பிரபுகுமார், சதாசிவம், சின்னுசாமி, ஆண்டியப்பன் (எ) ராஜா, பிரசாந்த், ராஜ்குமார், மருத்துவர் சுரேந்தர், தலைமை காவலர் சேகர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்

ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த மாதேஸ்வரி, மதியழகன், சாருலதா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கில் கடந்த 04.02.2025 ம் தேதி எதிரிகள் அலமேலு மற்றும் ரித்திக் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து நீக்கம் செய்யப்பட்டார்கள்.

5. இவ்வழக்கின் எதிரிகள் தங்கவேல், யமுனா, முனுசாமி ஆகியோர்களில் கடந்த 09.02.2025 ம் தேதி தங்கவேல், முனுசாமி கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். கடந்த 11.02.2025 ம் தேதி யமுனா கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். இவ்வழக்கில் மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் ராஜ்குமாரை விசாரித்து அவரிடமிருந்து அறிக்கை பெற்றேன். ராஜ்குமார் என்பவர் வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். (ஆட்சேபனை இல்லை என எதிரிகள் தரப்பில் கூறியதன் பேரில் குறியீடு செய்யப்பட்டது)

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 24.02.2025 ம் தேதி **நி.கு.எண் 46/2025 u/Sec. 126(2), 296(b), 115 (2), 118(1), 351 (3) BNS லிருந்து u/Sec. 126(2), 115 (2), 351 (3) BNS** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். எதிரி நீக்கல் அறிக்கையுடன் கூடிய சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 10** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. குற்ற எண்.45/2025 மற்றும் குற்ற எண்.46/2025 இரண்டு வழக்குகளிலும் சம்பவம் நடந்த இடம், சம்பவம் நடந்த நேரம் ஒன்று என்றால் ஆமாம். இரண்டு வழக்குகளும் எதிரிடை வழக்கு என்றால் ஆமாம். இதில் குற்றவாளி யார் என பகுப்பாய்வு செய்து யார் என்று சொல்ல முடியுமா என்றால் இரு தரப்பினருமே குற்றவாளிகள் ஆவார்கள். இரண்டு தரப்பிலும் தவறு உள்ளதாக சொல்லி குற்ற அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம்.

8) என்னால் யார் குற்றவாளி என உறுதியாக கண்டறிய முடியவில்லை என்றால் இரு தரப்பிலும் குற்றவாளிகள் ஆவார்கள். இரண்டு வழக்கிலும் சாட்சிகள் பொதுவானவர்கள் என்றால் ஆமாம். ஆண்டியப்பன், பிரசாந்தை தவிர மற்ற சாட்சிகள் வேறு வேறு நபர்கள் என்றால் சரிதான். மகஜர் சாட்சிகளை தவிர மற்ற சாட்சிகள் இரு வழக்கிலும் வெவ்வேறு சாட்சிகள் என்றால் சரிதான்.

9) இந்த வழக்கில் காசிம் (எ) பிரபுகுமார், சதாசிவம், சின்னுசாமி ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன், ஆனால் இந்த சம்பவத்தை ஒத்த குற்ற எண்.45/2025 என்ற வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த மேற்படி சாட்சிகளை விசாரிக்காமல் விட்டதற்கு என்ன காரணம் என்றால் அவர்கள் மேற்படி வழக்கு பற்றிய விவரத்தை என்னிடம் சொல்லவில்லை.

10) இந்த வழக்கில் மேற்படி சாட்சிகளான காசி என்கிற பிரபுகுமார், சதாசிவம், சின்னுசாமி ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை பற்றி நேரில் பார்த்ததாக வாக்குமூலம் தந்ததால் அந்த சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றதை வைத்து சம்பவம் உண்மையென தெரிந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சின்னுசாமியின் வாக்குமூலத்தில் 2025ம் வருடத்தில் மாலை 4 மணி சுமாருக்கு காவல் நிலையத்தில் தான் இரு தரப்பினரும் சண்டை செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. குழந்தை நல அமைப்பினர் எதிரியை விசாரித்து சென்றதை குறித்து சின்னுசாமி, எதிரி யமுனா, எதிரி முனுசாமி ஆகியோர் மதியழகன் வீட்டிற்கு முன்பாக வந்து கொண்டிருந்த போது மதியழகன் தான் தங்கவேலை தாக்கினார் என்றால் சரியல்ல. சாருலதா யமுனாவின் தலைமுடியை பிடித்து இழுத்து கால் முட்டியால் வயிற்றின் மீது உதைத்தார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு இல்லை.

11) நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தான் தகராறு நடந்தது என்றும் வீட்டிடம் தகராறு நடக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சி சதாசிவம் 02.02.2025ம் தேதி நேரடி சாட்சிகள் பக்கத்தில் உள்ள போது மதியழகன் தான் தங்கவேல் மனைவியிடம் தவறாக

பேசிய நிலையில் அது பற்றி கேட்க தங்கவேல் வந்தார் என்றும் அப்போது மதியழகன் தங்கவேலுவிடம் தகராறு செய்தார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. சாருலதாவை திருமணம் செய்வதாக மிரட்டி துன்புறுத்தவில்லை என்றால் சரிதான். சதாசிவம் சாட்சியத்தில் சாருலதா சம்பவயிடத்தில் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சாருலதா சம்பவயிடத்தில் இருந்தார்.

12) தங்கவேல் வகையறாக்கள் தான் மதியழகனை தாக்கியதாக சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் அவ்வாறு இல்லை. இரு தரப்பினரும் மாறி மாறி தாக்கிக் கொண்டார்கள். விசாரணைப்படி சம்பவம் வீட்டிற்குள் எங்கு நடந்தது என்றால் வீட்டின் முன்பாக வெளிப்புறம் நடந்தது. வீட்டு காம்போன்டுக்குள் நடந்தது. சாட்சிகள் அவ்வாறு சொல்லியுள்ளார்களா என்றால் வீட்டிற்கு முன்பாக நடந்ததாக சொல்லியுள்ளார்கள்.

13) வாக்குமூலம் பதிவு செய்த தலைமை காவலர் சேகர் வீட்டிற்குள் நடந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் வீட்டிற்கு முன்பாக நடந்ததாக என் விசாரணையில் தெரிய வந்தது. குடும்ப நல அலுவலரை எப்போது விசாரித்தேன் என்றால் 4.02.2025 ம் தேதி விசாரித்தேன். சாருலதாவின் தந்தை சொல்லிக்கொடுத்தும், பள்ளியில் பயிலும் மாணவி மனப்பாடம் செய்து சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது.

14) இளவர் சாருலதாவை 1ம் எதிரிக்கு திருமணம் செய்து வைக்க வற்புறுத்தி மிரட்டியதாக என் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார், ஆனால் அது பொய்யாகும். மதியழகன் சாருலதாவை மிரட்டி தான் வாக்குமூலம் அளிக்க வைத்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. தவறான போதை பழக்கத்திற்கு அடிமையான நபர் மதியழகன் என்றால் இல்லை.

15) குணவதி தீராத வயிற்று வலி காரணமாக தான் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. ராஜ்குமார் தனது அறிக்கையில் அவ்வாறு சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். சாருலதா என்பவருக்கு வெளிப்புற காயம் ஏதுமில்லை என்றால் ஆமாம். உள்புற காயம் ஏற்பட்டதாக பொய்யாக

சொல்வதற்கு வாய்ப்புள்ளதா என்றால் அது பற்றி நான் சொல்ல முடியாது. தொன்னை, கட்டை ஆகியவற்றை வைத்து மிரட்டியதாக நான் தெரிந்து கொண்டேனா என்றால் சாட்சிகள் சொன்னார்கள். ஆனால் சம்பவயிடத்தில் தொன்னை, கட்டையை நான் கைப்பற்றவில்லை.

16) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லாத நிலையில் தந்தை, பெரியம்மா, மற்றும் மகள் சாருலதா ஆகியோர் சேர்ந்து எதிரிகளை தாக்கிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி மருத்துவமனையில் சேர்ந்து கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இரு தரப்பும் தாக்கிக் கொண்டார்கள்.

17) சாட்சிகள் முரண்பட்ட சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த குழந்தையின் வீட்டை சுற்றி CCTV கேமரா உள்ளது என்றால் உள்ளது ஆனால் உபயோகத்தில் இல்லை. தங்கவேல் மனைவி மற்றும் மகன், மகள் ஆகியோர் பூர்வீக நிலத்தில் விவசாயம் செய்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் ஆமாம். மதியழகன் சைகோ மற்றும் கஞ்சா பழக்கத்திற்கு அடிமையானர் என்பதால் சாருலதா அவருக்கு பயப்படுகிறார் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது.

18) ராஜ்குமார் தனது அறிக்கையில் மேற்சொன்னவற்றை சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். குணவதி இறந்த பிறகு நல்ல முறையில் இரு குடும்பமும் பழகி வந்தார்கள் என்றால் இல்லை. அதற்கு முன்பு நன்றாக பழகி வந்துள்ளார்கள். குணவதி அவரது அம்மா வீட்டிற்கு சென்று பூச்சிமருந்து சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாருலதாவிற்கு ஆற்றுப்படுத்துதல் வழங்கி அவர் தொடர்ந்து கல்வி பயிலவும் சிறுமி விரும்பினால் ஓமலூர் பாத்திமா மகளிர் மேல் நிலைப்பள்ளியில் கல்வி பயில ஏற்பாடு செய்து தருவதாகமவும் சிறுமி விரும்பினால் ஓமலூர் இருதாலயா குழந்தை இல்லத்தில் தங்க வைப்பதாக சிறுமியிடமும், அவர் தந்தை மதியழகனிடம் தெரிவித்ததாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளார்.

19) பிப்ரவரி 2024 மற்றும் ஆகஸ்ட் 2024 முதல் குழந்தையை திருமணம் செய்ய தங்கவேல் வற்புறுத்தினார் என்று சொல்வது பொய் என்றால் ஆமாம். 1ம் எதிரியின் மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சியில் தங்கவேல் சாருலதாவை வீட்டிற்குள் அடைத்து வைத்து மூச்சு திணறும் அளவிற்கு கொடுமை செய்வதாக சொல்வது பொய் என்றால் ஆமாம்.

20) சாருலதாவின் தாயார் குணவதி இறந்து 10 நாட்கள் கழித்தும் அதேபோல் மஞ்சள் நீராட்டு விழா நடந்து 10 நாட்கள் கழித்தும் தன்னை எதிரிகள் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்திய விவரத்தை தனது தந்தை மதியழகனிடம் கூறியதாக எந்த விவரத்தையும் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

21) சாட்சி பட்டியலில் உள்ள சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக உள்ள நிலையில் உண்மை நிலவரத்தை தெரிந்தும் குழந்தைக்கு ஆதரவாக இந்த வழக்கை எதிரிகள் மீது சாருலதாவின் வற்புறுத்தலுக்கு ஏற்ப புலன் விசாரணை செய்யாமல் சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் புகார்தாரர் தரப்பில் எதிரிகளை தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பித்துக் கொள்ள கொடுத்த புகாரின் பேரில் எதிரிகள் மீது உண்மைக்கு புறம்பாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**